**பன்வில பிரதேச சபை - 2022**

-------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

.

பன்வில பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பன்வில பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐந்தொகை திகதியில் முடிவடையாத 38 வழக்குகள் தொடர்பாக நிதி கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | எதிர்வரும் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வழக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும் |

#### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கட்டுக்கித்துல சன சமூக மண்டபம் அமைந்துள்ள ரூபா 50,000 பெறுமதியான காணி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டின் பாடசாலை மாணவர்களுக்கு புத்தகங்களை பகிர்ந்தளிக்கும் செயற்பாட்டை நிறைவேற்றாமல் ரூபா 1,500,000 தொகை கடன் கொடுத்தோராக ஆக்கப்பட்டமை காரணமாக கடன் கொடுத்தோர் ரூபா 1,500,000 ஆல் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது நிறைவேற்று வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | குறித்த காலப்பகுதியில் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும் |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோஸலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 571(3) ஆம் பிரிவு | 2014 முதல் 2019 வரையான காலப்பகுதிக்குரிய காலாவதியான ரூபா 134,878 ஆன 07 நானாவித வைப்புக்கள் விடுவிக்கப் பட்டிருக்கவில்லை. | வருமானத்திற்கு எடுப்பதற்கோ கொடுப்பனவு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படும் | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 301,966 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,716,683 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,797,100 | 2,059,507 | 2,119,971 | 1,541,363 | 1,816,450 | 3,327,506 | 1,725,178 | 1,602,327 |
| (ii) | வாடகை | 2,271,600 | 2,373,290 | 1,154,160 | 4,824,700 | 2,203,565 | 4,686,950 | 1,081,380 | 3,605,570 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 2,446,000 | 1,647,790 | 1,675,667 | 1,145,993 | 2,872,200 | 2,195,314 | 1,021,643 | 1,173,870 |
| (iv) | ஏனைய வருமானம் | 4,981,800 | 5,335,516 | 5,266,441 | 5,323,217 | 4,900,000 | 9,879,725 | 4,625,583 | 5,254,142 |
| | | 11,496,500 | 11,416,103 | 10,216,239 | 12,835,273 | 11,792,215 | 20,089,495 | 8,453,784 | 11,635,909 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும** | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 1,062,391 ஆக காணப்பட்டதுடன் அலகொன்றில் நிலுவை வீதவரி மீதி ரூபா 5,000 இற்கு மேற்பட்ட 60 ஆதனங்களின் கூட்டுத்தொகை ரூபா 463,466 ஆக இருந்தது. | அடுத்த ஆண்டுகளில் நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுப்பதாக | சட்டத்தின் பிரகாரம் வருமானம் அறவிடப்பட வேண்டும் |
| (ii) | ஏக்கர் வரி கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அதிகார பிரதேசத்தில் ஏக்கர் வரி அலகுகள் இனங்காணப்படா திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 66,557 ஆன நிலுவை ஏக்கர்வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டுகளில் கணிப்பிடுவதற்கும் நிலுவையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக | கணிப்பீடு செய்து நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ)** | **கடை வாடகை** | | |
| | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு பொது சந்தை தொகுதியின் நிலுவை கடை வாடகை மொத்தம் ரூபா 4,777,200 ஆக இருந்ததுடன் ஆண்டிற்குரிய பட்டியலிடல் ரூபா 1,194,600 ஆக இருந்தது மீளாய்வாண்டில் நிலுவை வருமானத்திலோ பட்டியலிடப்பட்ட வருமானத்திலோ எந்த ஒரு தொகையும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | சட்ட ரீதியாக குறித்த நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை தொகைக் அறவிடப்பட வேண்டும். |
| **(இ)** | **அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்** | | |
| | 69 கைத்தொழில்களில் இருந்து மொத்தம் ரூபா 130,900 ஆன கைத்தொழில் வரி, வியாபார வரி, வியாபார அனுமதி பத்திரங்கள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சட்ட ரீதியான நடைமுறை ஊடாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | உரிய காலத்தில் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும் |

**(ஈ) ஏனைய வருமானம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126 (vii)(ஏ) பிரகாரம் மீளாய்வாண்டின் 26 நிறுத்துமிடங்களில் இருந்து 207 முச்சக்கர வண்டிகளுக்காக ரூபா 659,375 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. அதில் 2018 முன்னர் 79 முச்சக்கர வண்டி உரிமையாளர் களிடமிருந்து ரூபா 214,850 ஆன நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. | உப உறுப்புரையின் பிரகாரம் நிலுவைத் தொகை அறவிடுவதற்கும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் செயற்படுவதாக | நிலுவைக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும் |
| **(ii)** | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை நீர் கட்டண மீதி ரூபா 1,092,542 ஆக இருந்ததுடன் அதில் ஒரு அலகு நீர் கட்டண நிலுவை ரூபா 5,000 இற்கு மேற்பட்ட 92 நீர் பாவனையாளர் அலகுகளிலிருந்து மொத்தம் ரூபா 690,008 ஆன நிலுவை நீர்க் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சட்ட ரீதியாக நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை நீர்க் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும் |
| (iii) | 2016 பெப்ரவரி 23 ஆந் திகதிய 1955/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 246,762 ஆன நிலுவை விளம்பர கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவிடுவதற்கு சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதாக | ஆண்டின் போது வருமானம் அறவிடப்பட வேண்டும் |
| (iv) | மீளாய்வாண்டின் இறுதித் திகததியில் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை கழிவுப்பொருள் கட்டணம் ரூபா 412,915 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை | நடமாடும் சேவைகள் மற்றும் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் அறவிடப்படுவதாக | - மேற்படி - |

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணங்களும்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 216,913 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 3,767,000 ஆக இருந்தது. | நிலுவையைப் பெற்றுக் கொள்ள வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக | நிலுவை முத்திரைக் கட்டணங்களையும் நீதிமன்ற தண்டப் பணத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சபைக்குரிய 03 நீர் செயற்திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட நீர் மாதிரி பரிசோதனை அறிக்கைகளின் பிரகாரம் ஈ கோலி (E Coli) பாக்டீரியா கலவை 2 - 630 இடைப்பட்டிருந்ததுடன் கோலிபாம் (Coliform) பக்டிரீயா 10 – 1050 இற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. 1987 இன் 15 ஆம் பிரதேச சபைகள் சட்டத்தின் 78(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகளை எடுக்காமல் அசுத்தமான நீர் பொது மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. | குளோரின் இடுதல் மற்றும் உரிய காலப்பகுதியல் நீர் மாதிரிகளைப் பரிசோதனை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சுத்தமான குடிநீர் விநியோகிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் நிதி ஏற்பாட்டின் பேரில் முன்னைய ஆண்டில் நக்கல்ஸ் சுற்றுலா நிலையத்தில் விருந்தோம்பல் உபசரிப்பு இல்லமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 13,087,407 தொகைக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் 2022 ஏப்ரல் வரையில் ரூபா 5,866,860 ஆன பட்டியலுக்காக ரூபா 2,743,663 தொகை ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டு இருந்தது. இந்த நிர்மாணத்தின் வேலைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக கட்டிடங்களின் நிர்மாணங்களுக்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 4,404,748 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த நக்கல்ஸ் பம்பரஅல்ல சுற்றுலா கேந்திரத்தில் இருந்தும் எவ்வித வருமானத்தையும் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் புதிய கட்டிடங்களுடன் சேர்த்து ஒரே ஆதனத்தில் வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை நடவடிக்கை எடுப்பதாக | நிர்மாண வேலைகளை விரைவில் பூர்த்தி செய்து வருமானம் உழைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்த வேண்டும் |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,365,834 ஆக இருந்தது. அதில் 03 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட கால வீச்சிற்குரிய மீதிகளின் மொத்தம் ரூபா 1,225,713 மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் மொத்தம் ரூபா 17,223 ஆக இருந்தது. | நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பெறவேண்டிய பணம் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாணக் கடன் கொடுத்தோர் ரூபா 9,918,830 ஆக இருந்தது அதில் 03 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுரிய ரூபா 1,461,316 ஆக இருந்தது. | குறித்த கொடுப்பனவுகளை மிக விரைவில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | கடன் கொடுத்தார் மீதிகள் தீர்வு செய்யப்பட வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகையும்** | | |
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது 11 பதவிகளில் 15 வெற்றிடங்களும் ஒரு பதவியில் 05 மிகைகளும் காணப்பட்டன. | வெற்றிடங்களுக்காக குறித்த தரப்பினர் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் மிகை பதவியணியினை கடமைகளுக்காக ஈடுபடுத்துவதாக | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் குறித்த நடவடிக்கைளை செய்ய வேண்டும். |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| 2012 ஆம் ஆண்டில் சேவை இடை நிறுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடம் இருந்து ரூபா 12,600 தொகையும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மரணித்த இரண்டு ஊழியர்களிடமிருந்து ரூபா 311,320 ஆன கடன மீதிகள் அறவிடப்பட்டிருக்க வில்லை. | கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 ஜனவரி 24 ஆந் திகதிய 2/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் அரச ஊழியர்களின் இயலளவு மேம்படுத்துவதற்காக குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மனிதவளத் திட்டம் ஒன்றையும் மற்றும் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் | செயலாற்றல் உடன்படிக்கையில் கைச்சாத்திட நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டில் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 27 வருமான விடயங்களில் 75 சதவீதம் முதல் நூறு சதவீதம் வரையிலும் 15 செலவின விடயங்களில் 74 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | மிகவும் சரியான தகவல்களைப் பெற்று ஆக்கபூர்வமான பாதீடொன்றை எதிர்காலத்தில தயாரிப்பதாக | கவனத்துடனும் தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டும் பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப் பட்டிருந்ததுடன் அவற்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டு அவற்றை அடைந்து கொள்வதற்கும் குறிகாட்டிகளை இனங்காணப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |